## விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம் - 2015

விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1992 இன் 09 ஆம் இலக்க விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதிய அதிகாரச்சட்டத்தின் 9(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிச் செயலாற்றல் கூற்றின் படி மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ரூபா 1,256,732 மிகையொன்று அவதானிக்கப்பட்டதுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 285,389 ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 1,542,121 ஆன அதிகரிப்பைக் காட்டியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அரசாங்க மானியம் ரூபா 1,500,000 இனால் அதிகரித்தமை அந்த மிகை அதிகரிப்பிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

(அ) 1992 இன் 09 ஆம் இலக்க விழிப்புலனற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கை நிதிய அதிகாரச் சட்டத்தின் பிரகாரம்

* விழிப்புனற்றோருக்காக கல்விசார் மற்றும் தொழிற் பயிற்சி வசதிகளை வழங்குதல்.
* விழிப்புலனற்றோருக்காக வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து தேவையான சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு சுயதொழிலுக்காக நிதியுதவியும் வழிகாட்டல்களும் வழங்குதல்.
* கலைப் பாடநெறியைப் பின்பற்றுவதற்கு அல்லது தொழிற் பயிற்சியினைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமான வகையில் அவர்களுக்கு விடுதி வசதிகளை வழங்குதல்
* விழிப்புலனற்றோருக்கான நலன்புரிக்கான உத்திதேசத் திட்டங்களை செயற்படுத்தல் மற்றும் அவர்களினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்காக சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குதல் மற்றும்
* சம உரிமைகள் மற்றும் சம சந்தர்ப்பங்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு விழிப்புலனற்றவர்களை தவிர்க்கும் நிலைமையை அகற்ற செயற்படுதல் என்பன நிதியத்தின் முதன்மைக் குறிக்கோள்களாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் போது விழிப்புலனற்றோருக்கான புனர்வாழ்வழிக்கும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ரூபா 7,000,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இதன் போது மேற்கூறப்பட்ட நோக்கங்களிலிருந்து 04 நோக்கங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 6,050,000 தொகையான நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 4,722,117 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் 250 பிள்ளைகளுக்காக கல்வி மற்றும் கலாசார நடவடிக்கைகளுக்கு நிதியுதவி அளிப்பதற்கு ரூபா 2,125,000 தொகையான நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் 165 மாணவர்களுக்கு மாத்திரம் நிதியுதவி வழங்கப்பட்டிருந்தது. அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அது 15 சதவீத குறைவாகும்.

(ii) திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 03 நிறுவனங்களில் விழிப்புலனற்ற 70 நபர்களுக்காக புனர்வாழ்வு நிதியுதவி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 16 பேருக்கு மாத்திரமே நிதியுதவி வழங்கப்பட்டிருந்தது. அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 42 சதவீதம் வீழ்ச்சியடைந்தமையைக் காட்டியது.

(iii) மீளாய்வாண்டில் 04 நபர்களுக்காக தொழிற்பயிற்சி வழங்குவதற்கு நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 02 பயிற்சி பெறுனர்களுக்காக மாத்திரம் தொழிற்பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மொத்தமாக நிதியேற்பாடு செய்யப்பட்ட தொகையில் 50 சதவீதத்தை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(iv) விழிப்புலனற்றவர்களுக்கு கலைப் பாடநெறிகளை தொடர்வதற்கோ அல்லது தொழிற்பயிற்சியினை பெற்றுக்கொள்வதற்கோ முடியுமான வகையில் அவர்களுக்கு விடுதி வசதிகளை வழங்குதல் மற்றும் விழிப்புலனற்றவர்களினால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களுக்காக சந்தை வசதிகளை வழங்குதல் என்ற 02 நோக்கங்களை அமுல்படுத்துவதற்கு நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விழிப்புலனற்றவர்களின் புனர்வாழ்வு நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 02 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் என்பன முகாமைத்துவ சபை ஒன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் சபையின் இரு அங்கத்தவர்கள் முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் நடாத்தப்பட்ட எந்தவொரு முகாமைத்துவ சபைக் கூட்டங்களிலும் பங்குபற்றியிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட முகாமைத்துவ சபை கூட்டத்தின் போது சகல விழிபுலனற்றோரினதும் ஊனமுற்றோர்களினதும் எண்ணிக்கை தொடர்பான தரவுப் பிரிவொன்றை பேணிச் செல்லல் மற்றும் விழிப்புலனற்றோருக்கான சமூக பாதுகாப்புத் திட்டமொன்றை தயாரிப்பதற்கு முன்மொழிவுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

நிதியத்திற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் மீள் திருத்தம் செய்யப்பட்டு செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் திட்டத்தின் இலக்கினை அடைந்துகொள்ள முடியாதிருந்தது.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

------------------------------------

பாதீட்டின் செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பீடு செய்த போது 17 சதவீதம் முதல் 86 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு முறையொன்றாக பயன்படுத்தப்பட்டிராதிருந்தமை அவதானிக்கப்பட்டது.